மாவட்ட
அபிவிருத்திச்
சபைகள்

320
இந்தி

Theevadhas jebanesan
Leon.
Ps. Sp. U/J.

175

32
இந்தி

மாவட்ட அபிவிருத்திச் சபைகள்:

வரலாற்றுப் பின்னணி

*****

கா. இந்திரபாலா

1980 ஜூலை 10இல் நடைபெற்ற கருத்தரங்கில்

சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.

தென்னாசியவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்

320
இந்தி

320
இந்

EVELYN RUTNAM LIBRARY JAFFNA
330

# மாவட்ட அபிவிருத்திச் சபைகள்:

## வரலாற்றுப் பின்னணி

கா. இந்திரபாலா
வரலாற்றுத்துறை.

இவ்வாண்டு அமைக்கப்பட்டு இருப்பதாக ஜனாதிபதி ஜயவர்தன அவர்கள் அடிக்கடி கூறிவரும் மாவட்ட அபிவிருத்திச்-சபைகள் இந்நாட்டின் வரலாற்றில் ஒரு வெறும் நிர்வாகஅபிவிருத்-தியைக் கணித்து நிற்பவையாக அல்லது, தமிழர் பிரச்சினை சம்பந்-தமாக எடுக்கப்படும் ஒரு முக்கியமான நடவடிக்கை என்பதை மறக்-கமுடியாது. அந்த வகையில் இந்த நடவடிக்கைக்கு ஒரு நீண்ட வரலாற்றுப் பின்னணி உண்டு. சமஷ்டி ஆட்சி, சுயாட்சி என்ற கோரிக்கைகளை ஒன்றன் பின் ஒன்றாக வைத்து வளர்ந்து வந்துள்ள ஓர் இயக்கத்தின் பின்னணியில், நாட்டின் ஒரு முகப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை மத்தியிலிருந்து பிராந்தியங்களுக்கு ஓரளவு கையளிப்பதன் மூலம் பிரச்சினையைத் தீர்க்கக் கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் அரசாங்கத் தலைவர்கள் மாவட்ட சபை முறையைப் பிரேரித்து வந்துள்ளனர். ஒவ்வொருமுறையும் அரசாங்கத்துக்கு எதிரான சக்தி-களின் எதிர்ப்பு ஏற்பட அப்பிரேரணையும் கைவிடப்பட்டு, மேற்படி பிரச்சினை உக்கிரமடைய வழிதிறக்கப்பட்டது. இவ்வாண்டு மீண்டும் மாவட்ட சபை முறையை அமுலாக்கத் திட்டமிடுவதாக அரசாங்கம் அறிவித்து வருகின்றது. மீண்டும் இத்திட்டத்துக்கு என்ன நடக்கும் என்பது சொல்லமுடியாத ஒன்றாகும்.

## பல்லின சமுதாயம்

வரலாற்று ரீதியாக இலங்கைத்தீவில் ஒரு பல்லின சமுதாயம் இருந்து வந்துள்ளது. நீண்ட காலமாக ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் இங்கு வாழ்ந்து வந்ததை மறுக்கமுடியாது. அவ்வாறே, அரசியல் ரீதியாக ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகள் காலத்துக்குக் காலம் இருந்து வந்துள்ளன. அரசியல் தேவைகளுக்காக ஒரு சிலர் என்ன கூறினும், ஐரோப்பியர் இந்நாட்டை ஆளத்தொடங்கிய போது, இற்றைக்கு ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன்பு, இலங்கையில் மூன்று முக்கிய அரசுகளும், பல வன்னிச் சிற்றரசுகளும் இருந்தன. வடக்கில் ஓர் அரசு, மலையகத்தில் ஒர் அரசு, தென் மேற்கில் ஓர் அரசு என அமைந்திருந்த மூன்று பெரும் அரசுக்கள், அம் மூன்று பிரதேசங்களுக்கிடையே சமூக-பண்பாட்டு வேறுபாடுகள் வலுவடைவ-தற்கு உதவின. பதினேழாம் பதினெட்டாம் நூற்றண்டுகளில் தென்-மேற்கிலிருந்த அரசு போத்துக்கீசராலும் பின்னர், ஒல்லாந்தராலும் ஆளப்பட, மலையகத்து அரசு தொடர்ந்து சுதந்திரமாக இருந்ததினால், முன்னரே ஏற்படத் தொடங்கிய வேறுபாடுகள் மேலும் அவ்விரு பிர-தேசங்களுக்குமிடையில் உக்கிரமடைந்தன. இதனால் கண்டிச் சிங்களவர், கீழ்நாட்டுச் சிங்களவர், என்று சிங்கள மக்கள் இரண்டாகப் பிரிவதற்-கும் வழிதிறக்கப்பட்டது. பதினேழாம் பதினெட்டாம் நூற்றுண்டுகளிலே வடக்கே இருந்த தமிழ் இராச்சியமாகிய யாழ்ப்பான அரசும் போர்த்-துக்கீசராலும் ஒல்லாந்தராலும் ஆளப்பட்டாலும், இப்பிரதேசம், தென்-மேற்குப் பிரதேசத்திலிருந்து வேறாக நிர்வகிக்கப்பட்டதனால் முன்னைய வேறுபாடுகள் தொடர்ந்தும் இருப்பதற்கு நிலைமை உகந்ததாக அமைந்தது.

இதனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கை ஓர் ஒன்றிணைக்கப்பட்ட நிர்வாகத்தின் கீழ் நவீன காலத்தை அடைய, இங்கு பல்லின சமுதாய அமைப்பு ஒன்று மாற்றமுடியாத வகையில் வளர்ந்திருந்தது. இதனை ஆரம்பத்திலிருந்தே ஆங்கிலேய ஆட்சியாளர் அங்கீகரித்திருந்தனர்.

"... தங்கு நிலை நாட்டின் குடிகளுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குதலே ஒரு சட்டவாக்க மன்றத்தை அமைப்பதன் அடிப்படை நோக்கம்..."
(" ... essential purpose of establishing a legislative body has always been to give representation to the inhabitants of the dependency ... ")
என்ற கொள்கைக் கிணங்க 1833 இல் முதல் முறையாக இலங்கையில் ஒரு சட்டவாக்கச்சபை ( Legislative Council ) அமைக்கப்பட்ட போது அதில் ஒரு சிங்களவருக்கும் ஒரு தமிழருக்கும் அங்கத்துவம் அளிக்கப்பட்டது. இச் செயல் இலங்கையிலே தமிழரும் சிங்களவரும் இரு வேறுபட்ட இனங்களாக வாழ்கின்றனர் என்பதையும் அவர்களுக்கு வேறுவேறு பிரதிநிதிகள் இருக்க வேண்டும் என்பதையும் ஆங்கிலேயர் தொடக்கத்திலேயே அங்கீகரித்திருந்தனர் என்பதை உணர்த்துவதாய் அமைந்தது. 1889இல் இருந்து கண்டிச் சிங்களவருக்கு வேறாகப் பிரதிநிதித்துவம் வழங்கியமை இலங்கையின் பல்லின அமைப்பினை அவர்கள் தொடர்ந்து அங்கீகரித்தனர் என்பதை வலியுறுத்துகின்றது.

இவ்வாறாக, வெவ்வேறான அரசுகளின் கீழிருந்த இனங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியருடைய ஒற்றுமைப்பட்ட நிர்வாகத்தில் வேறு வேறான பிரதிநிதித்துவமுடைய இனங்களாக இணைந்து செயற்படத் தொடங்கின. இந்த இனங்களைப் பொறுத்துத் தாம் தாம் வேறு வேறு இனங்கள் என்ற உணர்வு பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் காணப்பட்டது எனலாம்.

## ஆங்கிலக் கல்வி கற்ற மத்திய வர்க்கத்தின் தோற்றம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியர் கடைப்பிடித்த கவனியாதிக்கக் கொள்கையின் விளைவாகவும் மிஷனரி நடவடிக்கைகளின் விளைவாகவும் ஆங்கிலக் கல்வி கற்றுத் தொழில்களையும் அரசாங்க உத்தியோகங்களையும் பெற்ற மத்திய வர்க்கம் ஒன்று உருவாகியது. ஆரம்பத்தில் இவ்வர்க்கத்தில் இடம் பெற்றவர்கள் தமிழர்களும் கரைநாட்டுச் சிங்களவருமே. இவர்களுக்கிருந்த வேலைவாய்ப்புக்களின் தன்மையிலும் இவர்களுடைய கருத்துக்கள், கண்ணோட்டங்கள் ஆகியவற்றின் தன்மையிலும், இவர்கள் பிரதேச உணர்வுகளையிழந்த ஒரு பொது இலங்கையர் சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர் எனலாம். இந்த நிலை சிறப்பாகத் தமிழ் மத்திய வர்க்கத்தினரைப் பொறுத்தப் பெருமளவிலே காணப்பட்டது. ஆறல் கண்டிச் சிங்களவர் மத்தியிலே தோன்றிய மத்திய வர்க்கம் ஆரம்ப கட்டத்தில் இன உணர்வுடன் பிரதேச உணர்வையும் கொண்டிருந்த ஒரு வர்க்கமாகக் காணப்பட்டது. இந்த நிலையை விளங்கிக் கொண்டால், இருபதாம் நூற்றாண்டில் முதற்காலில் இன உணர்வுகள் வலுப்பெறத் தொடங்கிய போது, தமிழ் மத்திய வர்க்கத்தினர் மத்தியில் தமிழ்த்தேசியச் சிந்தனை எழவும் எழாது போக, கண்டிச் சிங்களவர் மத்தியில் கண்டியர் தேசிய வாதம் என்ற உபதேசியவாதம் ஒன்று எழுந்தது என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

## சிங்கள பௌத்த தேசிய வாதம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலில் இலங்கையின் தென்பாகத்தில் பௌத்த சிங்கள மக்கள் மத்தியிலே தேசிய உணர்வு ஏற்பட்டு, இன-மத-மொழி அடிப்படையில் தேசிய வாதம் ஒன்று எழுச்சிபெறத் தொடங்கியது. கிறிஸ்தவ மதத்தையும் ஆங்கில ஏகாதிபத்தியச் செல்வாக்கினையும் எதிர்த்து வளரத்தொடங்கிய இந்த இயக்கம் சிங்கள-பௌத்தர்

என்ற ஒரு பிரிவினர் தம்மை ஒரு தேசிய இனமாக இனங்கண்டு கொள்வதற்கு ( Sinhala Buddhist identity ) உதவியது. ஒரு மதமும் ஒரு மொழியும் அதன் இன்றியமையாத தனித்துவ அம்சங்களாக அமைந்தபோதும், நாட்டின் ஒரு பிரதேசமல்லாது, முழுநாடுமே அதற்குரிய தளமாகக் கொள்ளப்பட்டது. இதனாலே-தான் இந்த இயக்கம் வலுப்பெற்ற பிற்காலத்தில் பிறமதங்களுடனும், பிறமொழி பேசுவோருடனும் பிரச்சனைகள் ஏற்பட்டன. இதை ஒத்த வகையிலே அதே காலத்தில் ஓர் தமிழ் இந்துத் தேசிய வாதம் எழவில்லை. காலப் போக்கில் சிங்களப் பொது மக்களிடையே பெருஞ் செல்வாக்குப் பெற்ற இச் சிங்கள-பௌத்த தேசியவாதம் கண்டியர் தேசியவாதத்தையும், ஆங்கிலக் கல்வி பெற்ற மத்திய வர்க்கத்தினரது இலங்கையர் தேசிய வாதத்தினையும் ( Ceylonese nationalism ) மேவி மேலெழுந்தது.

## தமிழர் மத்தியில் இன உணர்வு

1833 தொடக்கம் 1920 வரை இலங்கையின் சட்டவாக்கச் சபையில் கரைநாட்டுச் சிங்களவருக்கும் தமிழருக்கும் ஒரே அளவான பிரதிநித்துவம் இருந்துவந்தது. அத்துடன் சிங்களவரும் தமிழரும் 1920 வரை இலங்கையின் பெரும்பான்மை இனங்கள் என்று கருதப்பட்டனர். இந்த நிலை இருக்கும் வரை தமிழ் அரசியல் வாதிகள் மத்தில் நாம் வேறான இனம் என்ற உணர்வு இருந்தாலும், பிரதேச அடிப்படையிலான தேசியவாத உணர்வு எதுவும் தோன்றியிருக்கவில்லை. அனைத்திலங்கையர் தேசியவாதத்தில்

நம்பிக்கை கொண்டோராய்த் தமது இன நலன்களை அத்தேசியவாத அமைப்பினுள் பாதுகாக்க அவர்கள் முற்பட்டனர் எனலாம்.

ஆனால் 1920 இல் நிலைமை மாறியது. அந்த ஆண்டின் பின்னர் திடீரெனத் தமிழர் சிறுபான்மையினராகக் கருதப்பட்டனர். புதிய சட்டவாக்கச்சபையில் முன்போல அவர்களுக்கு கரைநாட்டுச் சிங்களவருடன் சமமான பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. பிரதேச ரீதியான பிரதிநிதித்துவ முறை புகுத்தப்பட்டதால் தமிழ் பிரதிநிதிகளைவிடப் பன்மடங்கு கரை-நாட்டுச் சிங்கள பிரதிநிதிகள் தேர்தல் மூலம் சட்டவாக்கச் சபைக்குச் சென்றனர். 1921ம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட யாப்பின்படி 23 உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களைக் கொண்ட சட்டவாக்கச் சபையில் நான்கு (இந்தியர் உட்பட) தமிழருக்குமட்டுமே இடமிருந்தது.

இந்நிலையிலேதான் அனைத்து இலங்கையர் தேசியவாதத்தில் நம்பிக்கை இழந்தோராய் தமிழ் அரசியல் தலைவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்து விலகத்தொடங்கினர். இலங்கையர் தேசியவாதத்தில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த பொன்னம்பலம் அருணாசலம் அவர்களே பெரும் ஏமாற்றத்துடன் காங்கிரசில் இருந்து வெளியேறினார். 1921 ஒக்கஸ்டில் முதல் முறைமுறையாகத் தமிழ்த் தலைவர்கள் ஓர் இனரீதியான நிறுவனத்தை தமிழ்மகாஜன சபையை அமைத்தனர். இவர்கள் மத்தியில் இன உணர்வு மலரத்தொடங்கினும் தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பிரதேச ரீதியான பரிகாரம் எதையும் அவர்கள் நாடவில்லை முழுஇலங்கை அமைப்புக்குள்ளேயே இத்தீர்வினைக் காணலாம். என அவர்கள் எண்ணினர்.

## சமஷ்டிக் கோரிக்கை

இக் கட்டத்திலே சிங்கள மக்களுள் ஒரு பிரிவினர்தான் சிறுபான்மையினர் சம்பந்தமாக எழுந்த பிரச்சனைகளுக்குப் பிர-தேச அடிப்படையிலான ஒரு தீர்வினை முன்வைத்தனர்.

கரைநாட்டுச் சிங்களவரிலிருந்து தம்மை வேறுபடுத்திய கண்டிச் சிங்களத் தலைவர்கள் தமது தனித்துவம் பாதுகாக்கப் படவேண்டும் எனக் கோரத் தொடங்கி, ஒரு கண்டியர் தேசிய-வாதத்தை வளர்க்கலாயினர். 1925ல் இவர்கள் கண்டியர் தேசிய பேரவை (Kandyan National Assembly) என்ற ஒரு நிறுவனத்தைத் தாபித்து, 1927ல் இலங்கைக்கு ஒரு சமஷ்டி ஆட்சிமுறைதான் வேண்டுமெனக் கோரினர்.

இதற்கிடையில், 1926ல் , இவ்வாறு தமிழரும் கண்டிச் சிங்களவரும் கொண்டிருந்த அதிருப்தியைக்கண்ட தூரநோக்குடைய ஓர் இளம் கரைநாட்டுச் சிங்களத் தலைவர் நாட்டின் பிரச்சனைகளைத் தீர்க்க ஒரே ஒரு வழி சமஷ்டி ஆட்சிமுறையே என ஆணித்தரமாக, முதன் முறையாக எடுத்துரைத்து, அதற்காக ஆதரவும் தேடினார். அவர்தான் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி வந்ததும் அரசியலில் குதித்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க. 1926 ஜூலையில் யாழ்ப்பாணத்தில் மாணவர் காங்கிரஸ் ( Students' Congress , பின்னர் Youth Congress ஆக மாறிய நிறுவனம்) நடத்திய கூட்டத்தில் பண்டாரநாயக்க " எங்கள் அரசியல் பிரச்சனைகளுக்கு ஒரே ஒரு தீர்வு

சமஷ்டி முறையே" ( Fede--tion as the only Solution to our Political Problem-/ என்ற தலைப்பில் பேசுகை-யில் கூறியதாவது:

"... சிறுபான்மையினர் ஒருவரையொருவர் நம்பிக்கையில்லாது நோக்குகின்றனர். (அவர்களுக்கிடையிலான வேறுபாடுகள் அடிப்-படையானவை அல்ல என்று எண்ணுவது பிழை. ஒரு சில - பேராசை கொண்டோர் இவ்வேறுபாடுகளை உருவாக்கியுள்ளனர் என்றும், இவர்கள் இறந்த பின் வேறுபாடுகள் மறைந்துவிடும் என்றும் எண்ணுவோர் இருக்கின்றனர். நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த வேறுபாடுகள் இருக்கவில்லை. இவை (அப்-பொழுது) எழாததிற்கான காரணம் என்னவெனில் ஆங்கிலேயன் (இங்கு) தமிழன், கரைநாட்டுச் சிங்களவன், கண்டிச்சிங்களவன் ஆகியோரது தலைகள் மீது அமர்ந்திருந்தமையே.

"தங்கள் கைகளில் அரசாங்கப் பொறுப்பை எடுத்-துக் கொள்வதற்கு இவர்கள் பேசத்தொடங்கிய கணமே அடங்கி இருந்த வேறுபாடுகள் சூடுகொண்டு மேலெழத் தொடங்கியுள்ளன. பழைய வரலாற்றைப் பார்ப்பார்களேயானால் இந்த மூன்று இனங்களாகிய தமிழரும், கரைநாட்டுச் சிங்களவரும், கண்டிச் சிங்களவரும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் வாழ்ந்தும் ஒன்றிணையும் போக்கு எதையும் கொண்டிருக்கவில்லை என்பதை இவர்கள் காண்பார்கள். இவர்கள் தங்கள் மொழியையும் பழக்க வழக்கங்களையும், மதத்தையும் பேணி இருந்தனர். இந்த வேறு-பாடுகள் மெல்ல மறையும் என்பதில் நம்பிக்கை வைக்கும் எவனும் சிந்திந்து செயலாற்றாத ஒருவனே.

" ... இலங்கையில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் முழுத் தன்னுதிக்கம் வேண்டும். தீவின் விசேஷ வருமானத்தை கவனித்துக்கொள்ள ஒன்று அல்லது இரண்டு பேரவைகள் இருக்க வேண்டும். இந்த முறைக்கு எதிராக ஆயிரத்தொரு மறுப்புகளை எழுப்பலாம், ஆனல் அந்த மறுப்புக்கள் நீங்கியதும், ஏதோ ஒருவகைப்பட்ட சமஷ்டி அரசாங்கமே ஒரே ஒரு தீர்வாக அமையும் என்பதில் நம்பிக்கை தனக்கு (பண்டாரநாயக்கவுக்கு) உண்டு என்ருர்." [1]

யாழ்ப்பாணத்தில் நடத்திய இவ்விரிவுரைக்கு முன்பே திரு பண்டாரநாயக்க நனை சமஷ்டிக் கருத்தை முன்வைத்துப் பல கட்டுரைகளை Ceylon Morning Leader என்ற பத்திரிகையில் வெளியிட்டிருந்தார். [2] இதனைத் தொடர்ந்து 1927 நவம்பரில் கண்டியர் தேசியப் பேரவை இலங்கைக்குச் சமஷ்டி அரசு வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, கண்டியருக்குப் பிரதேசத் தன்னுதிக்கத்தை நாடி நின்றது. [3] அதே ஆண்டில் நியமிக்கப்பட்ட டொனமோர் குழுவுடன் யாப்புச் சீர்திருத்தம் பற்றிய தங்கள் விஞ்ஞாபனத்தைச் சமர்பித்த போது இலங்கை மூன்று பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுச் சமஷ்டி ஆட்சிக்குட்படுத்தப்பட வேண்டுமென கண்டியர் தேசிய பேரவையினர் கோரினர். [4] கரைநாட்டுச் சிங்களவர் பெரும்பான்மையினராக வாழ்ந்த கரையோர மாகாணங்கள் ஒரு பிரதேசமாகவும் தமிழர் மாகாணங்கள் ஒரு பிரதேசமாகவும் கண்டியர் மாகாணங்கள் மூன்ருவது பிரதேசமாகவும் இருக்க வேண்டுமென அவர்கள் கருதினர்.

அப்பொழுது தொட்டு முப்பது ஆண்டுகளாக இக்கோரிக்கையை கண்டியர் தலைவர்கள் முன்வைத்து வந்தனர் என்பது கவனிக்கத் தக்கது.

## தமிழர் நிலை

இலங்கையில் தமிழர் பெரும்பாலும் வாழும் வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒன்று கூட்டி தமிழர் பிரதேசமாக அவற்றைக் கொண்டு சமஷ்டி அரசொன்றில் இடம்பெறும் மூன்று பகுதிகளுள் ஒன்றாக அது கருதப்பட வேண்டுமென்று 1926ம் 1927ம் ஆண்டுகளில் கரைநாட்டுச் சிங்களத் தலைவர் சிலரும் ( எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாகக்க, சி. ஈ.கொரயா ) கண்டிச் சிங்களத் தலைவர்களும் கோரிக்கை விட்டிருந்தும் அப்பொழுதோ அல்லது அடுத்து வந்த இருபது ஆண்டு காலத்திலோ ஒரு தமிழ்த் தலைவராவது அக்கோரிக்கையை ஆதரிக்க முன் வரவில்லை என்பது கவனிக்கத்தக்கது. தமிழ்ப் பிரதேசத்துக்கு வெளியே தாம் கொண்டிருந்த நலன்களைப் பாதுகாக்கும் நோக்கம் இத்தலைவர்களை இந்நிலைக்கு ஆளாக்கியிருக்க வேண்டும்.

உண்மையில் தமிழ் மத்திய வர்க்கத்தினர் சமஷ்டிக்கருத்தை எதிர்த்தனர். திரு பண்டாரநாயக்க யாழ்ப்பாணத்தில் இக்கருத்தை தெரிவித்த போது பலர் அதனை எதிர்த்துப் பேசினர். சமஷ்டி முறையைவிட ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருப்பது பாதுகாப்பானதென ஒருவர் கருத்துத் தெரிவித்தார். பெரும்பாலானவர்கள் ஆங்கிலேயர் ஆட்சி என்றென்றும் நிலைக்குமென்றும் அது நிலைக்கும் வரை தமக்குப் பயமில்லை என்றும் அடிமனதிலே சுதந்திர காலம் வரை எண்ணி வந்தனர் என்றே தோன்றுகிறது.

EVELYN RUTNAM LIBRARY * JAFFNA *
330

திரு. பண்டாரநாயக்கவின் கருத்தை வன்மையாகக் கண்டித்து பத்திரிகையில் மறுப்பு எழுதிய ஒருவர் திரு. ஜேம்ஸ் இரத்தினம் ஆவர். தமிழரும் சிங்களவரும் தனித்தனி வாழவேண்டி நேர்ந்து விடும் என அவர் அச்சம் தெரிவித்தார். அவரும் வேறுபலரும் ஒற்றுமைப்பட்ட இலங்கையர் தேசியவாதத்தில் நம்பிக்கை கொண்ட தமிழ் மத்திய வர்க்கத்தைச் சேர்ந்தோராக இச்சமஷ்டி முறையின் நீண்ட கால நன்மைகளையோ, வளர்ந்து கொண்டிருந்த சிங்கள பௌத்த தேசியவாதத்தின் தன்மையினையோ உணரத்தவறினர். 1920களில் தமிழ்த்தலைவர்களும் இத்தகைய அமைப்புக்கு ஆதரவு தெரிவித்திருந்தால், சிங்கள பௌத்த தேசிய வாதத்தை வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களின் எல்லைகளுக்குள் கட்டுப்படுத்த முடிந்திருக்கும், இன்று நிலைமை வேறாக இருந்திருக்கும். 1920களில் பிரதேச அடிப்படையில் தமிழர் தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மிகவும் சாதகமான நிலை காணப்பட்டது. ஆனால் 1949 வரை தமிழ்த் தலைவர்கள் ஒற்றையாட்சி அமைப்பினுள் தமிழருக்கு கூடுதலான பிரதிநிதித்துவத்தைப் பெறுவதிலேயே கவனம் செலுத்தினர்.

## தமிழ் அரசுக் கட்சி

சிங்களத் தலைவர்கள் சமஷ்டிக் கோரிக்கையை முன் வைத்து ஏறக்குறையக் கால் நூற்றுண்டு சென்றபின்னர்தான் தமிழர் தரப்பில் இருந்து முதன் முறையாகச் சமஷ்டி முறைக்கு ஆதரவு கிட்டியது. 1949இல் சமஷ்டிக் கொள்கையின் அடிப்படையில் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை அமைத்த போது அக்கொள்கையை பிரதானமாகக் கொண்டு

பிரசாரம் நடத்திய முற்போக்கு தேசியக்கட்சி ( Progressive Nationalist Party ) இறந்திருந்தது. திரு. பண்டாரநாயக்காவும் அக் கொள்கையை கைவிட்டிருந்தார். கண்டிச் சிங்களவருடைய சமஷ்டிக் குரல் வலுவிழந்து காணப்பட்டது. அதே நேரத்தில், சிங்கள மத்திய வர்க்கத் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக வளரும் சிங்கள-பௌத்த தேசிய வாதத்திற்குச் சரணடைந்து கொண்டிருந்தனர். இதனால், தமிழருடைய சமஷ்டிக் கோரிக்கையானது மிகவும் காலம் தாழ்த்தி எழுப்பப்பட்ட ஒன்றாக அமைந்துவிட்டது. அத்துடன், எத்தகைய சமஷ்டிமுறை தேவைப்பட்டது என்பதையிட்டு தமிழரசுக்கட்சியினர் மத்தி-யிலேயே நெடுங்காலமாக மயக்க நிலை காணப்பட்டது.

ஆங்கிலக் கல்வி பெற்ற மத்திய வர்க்கத்தினருடைய செல்வாக்குத் தமிழர் அரசியலில் மேலோங்கி இருந்ததினால் 1949இல் அமைக்கப்பட்ட தமிழரசுக் கட்சிக்குப்பல ஆண்டுகளாகத் தமிழர் மத்தியில் பேராதரவு கிடைக்கவில்லை. இதனால் 1956 வரை இக்கட்சியின் கோரிக்கையைப் பெரும்பான்மையினரது கட்சிகள் பொருட்படுத்தவில்லை எனலாம். 1956ல் தனிச் சிங்களமே அரசாங்க மொழியாக்கப்பட வேண்டும் என்ற கோஷத்துடன் சிங்கள-பௌத்த தேசியவாதம் முழுமையாகக் கவனிக்கப்பட்டதும், திடீரெனத் தமிழர் பக்கத்திலும் சமஷ்டிக்கு ஆதரவு வளரத்தொடங்கியது.

## பிராந்தியச் சபைகள்.

1956 இன்பின் தமிழரசுக்கட்சியின் எதிர்ப்பியக்கம் வலுப்பெறத் தொடங்கியது, அப்பொழுது பதவியிலிருந்த பண்டாரநாயக்க அரசாங்கம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக தமிழை நியாயமான அளவு பயன்படுத்துவதற்கான ஒரு திட்டத்தையும் நிர்வாகத்தைப் பன்முகப்படுத்துவதற்கான பிராந்தியச் சபைகள் (Regional Councils ) பற்றிய ஒரு திட்டத்தையும்

வகுத்தது. இதில் இரண்டாவது திட்டம் தமிழர் பிரச்சினையைப் பிரதேச நிர்வாக உரிமைகளை வழங்குவதன் மூலம் தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுத்துக் கொண்ட முதலாவது திட்டமாக அமைந்தது. இந்தத் திட்டத்திலேதான், 1957 ஜூலை மாதம் பிரதமமந்திரி எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவும் தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் பேச்சுவார்த்தைகள் நடாத்தி, ஜூலை 26 இல் ஓர் ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்டனர் (பின்னிணைப்பைப் பார்க்கவும்). இந்த ஒப்பந்தத்தின்படி வட மாகாணம் ஒரு பிராந்தியமாகவும், கிழ்மாகாணம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியங்களாகவும் பிரிக்கப்பட வேண்டுமென்றும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியங்கள் மாகாண எல்லைகளை மீறி ஒன்று சேரவும், ஒரு பிராந்தியம் பலவாகப் பிரியவும் அனுமதிக்கப்படலாம் என்றும், பிராந்திய சபைக்கான பிரதிநிதிகள் நேரடித் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும், குடியேற்றத்தைப் பொறுத்த அந்தந்தப் பிராந்தியங்களிலுள்ள சபைகளுக்கே நிலம் பெறுவோரைத் தெரிவு செய்யும் அதிகாரம் இருக்க வேண்டுமென்றும் இருதலைவர்களும் சம்மதித்தனர்.[6]

இதுவே முதல் தடவையாக ஒரு பிரதேசரீதியான நிர்வாக முறையை தற்போதுள்ள மாகாணங்களின் அடிப்படையில் அமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி. ஆனால், துரதிர்ஷ்டவசமாக திரு. பண்டாரநாயக்க விரைவில் சிங்கள-பௌத்த தேசியவாதச் சக்திகளுக்குச் சரணடைந்து முன் கூறிய ஒப்பந்தத்தை 1958 இல் நிராகரித்ததோடு, பிராந்தியச் சபைகள் பற்றிய நகல் திட்டத்தையும் கைவிட்டார்.

பிராந்திய சபைகளுக்கு எதிரான இயக்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு முக்கிய பங்கினை வகித்தது. தமிழ் அரசு ஒன்றை உருவாக்குவதற்கு இந்த ஒப்பந்தம் ஒரு முதலாவது நடவடிக்கை என ஐக்கிய தேசியக் கட்சி பிரசாரம் நடத்தியது.[7]

தனிநாட்டுக் கோரிக்கை

பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்துச் சில மாதங்களாகச் சிங்களத் தலைவர்கள் சிலர் நடத்திய இயக்கங்கள் 1958 ஏப்ரலில் பிரதம மந்திரியின் வீட்டிற்கு அருகே சில பௌத்த பிக்குகள் சத்தியாக்கிரகம் நடத்ியதுடன் உச்சநிலை அடைய, திரு. பண்டாரநாயக்க தான் செய்த ஒப்பந்தத்தைச் செல்லுபடியாதாக்கினார். இதனைத் தொடர்ந்து முதன் முறையாகத் தனிநாட்டுக் கோரிக்கை ஒன்று பகிரங்கமாகத் தமிழ்த் தலைவர் ஒருவரால் முன்வைக்கப்பட்டது. வவுனியாவின் பாராளுமன்ற அங்கத்தவராகக் கடமையாற்றிய திரு. செ. சுந்தரலிங்கம் 1958 மே 13இல் வெளியிட்ட பகிரங்கக் கடிதமொன்றில், தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழி "பிரித்தானிய பொதுநல நாடுகளுள் ஒன்றாக அங்கத்துவம் பெறும் ஈழம் என்ற அரசு" (State of Eylom as a Member of the British Common Wealth of Nations) அமைக்கப்படுவதே எனக் கூறி, அதற்கு ஆதரவு தேடுமுகமாகத் தனது பாராளுமன்ற அங்கத்துவத்தை ராஜினாமாச் செய்து, மீண்டும் உப தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தார்.[8] அவர் அமைத்த அடங்காத் தமிழர் ஒற்றுமை முன்னணி ( பின்னர் 'ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணி' எனப் பெயர் பெற்றது.) தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து எழுந்த ஒரு கட்சியாகும்.

மாவட்ட சபைகள்.

1965 இல் திரு. டட்லி சேனநாயக்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி பொதுத் தேர்தலிலே போட்டியிட்ட போது தமிழரசுக் கட்சியின் உதவியை

நாடியது. இந்த உதவிக்குப் பதிலாக, தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சில நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தான் தயாராக இருப்பதாகத் திரு.சேனநாயக்க கூறினர். இதன் விளைவாகத் திரு.சேனநாயக்காவும் திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் ஓர் இரகசிய ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். (பின்னிணைப்பைப் பார்க்கவும்). இதன்படி, மாவட்ட சபைகளைச் அமைப்பதற்குத் திரு சேனநாயக்க சம்மதித்திருந்தார். இந்த ஒப்பந்தம் காரணமாகத் தமிழ் அரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் சேர்ந்த போதிலும், ஒப்பந்தத்தை அமுலாக்கத் திரு.சேனநாயக்க தவறினர். மீண்டும் ஒரு சிங்களத் தலைவர் சிங்கள பௌத்த சக்திகளுக்குச் சரணடைந்த கதையாயிற்று.

இதன்பின், மேலும் ஒரு தமிழ்க்கட்சி தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து உதயமாயிற்று. தமிழ் அரசுக் கட்சியிலிருந்து விலகிய ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற அங்கத்தவராகிய திரு.வி.நவரத்தினம் 'சுயாட்சிக்கழகம்' என்ற இக்கட்சியை ஆரம்பித்து வைத்தார்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி.

இவ்வாறு படிப்படியாகத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாது உக்கிரமடைய, மேலும் மேலும் தனிநாட்டுச்சிந்தனை ஒன்று தமிழர் மத்தியில் வளரலாயிற்று. இதன் விளைவாகவே இறுதியில் தமிழ் அரசுக் கட்சியும் தனது சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டு, 1976 இல் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு கொடுத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இடம் பெற்றது.

முன்னெருபோதும் இல்லாதவாறு தமிழர் மத்தியில் தேசிய உணர்வு வளர்ச்சியடைந்துள்ள இக்கட்டத்தில் மீண்டும் அரசாங்கக் கட்சி ஒரு பிரதேச நிர்வாக சபையை— இம்முறை மாவட்ட அபிவிருத்தி சபையை— முன்வைக்கின்றது. தமிழர் பக்கத்தில் கோரிக்கைமேலும் மேலும் கூடிச் செல்ல, அதற்குப்

பரிகாரமாக மறுபக்கத்திலிருந்து மேலும் மேலும் குறைவான ஒன்று முன்வைக்கப் படுகிறதைக் கடந்த 50 ஆண்டுக் கால வரலாறு காட்டுகிறது. 1920களில் தமிழர் கூடுதலான பிரதிநிதித்துவம் கோரி, 1940களில் சமமான பிரதிநிதித் துவம் கோரி, 1949இன் பின்பாகச் சமஷ்டிகோரி, இறுதியில் தனிநாடு கோரி நிற்கின்றனர். மறுபக்கத்தில், இப்பிரச்சினைக்குத் தீர்வாக, 1920களில் சிங்களத் தலைவர்கள் சிலர் சமஷ்டி முறையை முன்வைத்து, 1950களில் பிராந் திய சபைகளை முன்வைத்து, 1960களில் மாவட்ட சபைகளை முன்வைத்து, இப்பொழுது 1980களில் மாவட்ட அபிவிருத்தி சபைகளை முன்வைக்கும் நிலைக்கு வந்துள்ளனர்!

************************

அநுபந்தம்

## BANDARANAIKE - CHELVANAYAKAM AGREEMENT OF 26 JULY 1957

### Part A

"Representatives of the Federal Party have had a series of discussions with the Prime Minister in an effort to resolve the differences of opinion that had been growing and creating tension.

"At an early stage of these conversations it became evident that it was not possible for the Prime Minister to accede to some of the demands of the Federal Party.

"The Prime Minister stated that, from the point of view of the Government, he was not in a position to discuss the setting up of a Federal Constitution or regional autonomy, or to take any step that would abrogate the Official Language Act.

"The question then arose whether it was possible to explore the possibility of an adjustment without the Federal Party abandoning or surrendering any of its fundamental principles or objectives.

" At this stage the Prime Minister suggested an examination of the Government's draft Regional Councils Bill to see whether provision could be made under it to meet reasonably some of the matters in this regard which the Federal Party had in view.

"The agreements so reached are embodied in a separate document.

(The adjustment regarding the language issue is not included here.)

### Part B

1. Regional areas to be defined in the Bill itself by embodying them in a schedule thereto.
2. That the Northern Province is to form one regional area whilst the Eastern Province is to be divided into two or more regional areas.
3. Provision is to be made in the Bill to enable two or more regions to amalgamate even beyond provincial limit, and for one region to divide itself subject to ratification by Parliament. Further provision is to be made in the Bill for two or more regions to collaborate for specific purposes of common interest.
4. Provision is to be made for direct election of regional councillors. Provision is to be made for a delimitation commission for carving out electorates. The question of M.P.s representing districts falling within regional areas to be eligible to function as chairmen is to be considered. The question of Government Agents being regional commissioners is to be considered. The question of supervisory functions over larger towns, strategic towns and municipalities is to be looked into.

5. Parliament is to delegate powers and to specify them in the Act. It was agreed that regional councils should have powers over specified subjects including agriculture. co-operatives, lands and land development, colonisation, education, health, industries and fisheries, housing and social services, electricity, water schemes and roads. Requisite definition of powers will be made in the Bill.
6. It was agreed that in the matter of colonisation schemes the powers of the regional councils shall include the power to select allottees to whom lands within their area of authority shall be alienated and also power to selct personnel to be employed for work on such schemes. The position regarding the area at present administered by the Gal Oya Board in this matter requires consideration.
7. The powers in regard to the regional council vested in the Minister of Local Government in the draft bill to be revised with a view to vesting control in Parliament wherever necessary.
8. The Central Government will provide block grants to the regional councils. The principles on which the grants will be computed will be gone into. The regional councils shall have powers of taxation and borrowing.

## II. DUDLEY SENANAYAKE - CHELVANAYAKAM AGREEMENT OF 24 MARCH 1965

(as publicised by the Federal Party )

Mr.Dudley Senanayake and Mr.S.J.V.Chelvanayakam met on the 24th day of March 1965 and discussed matters relating to some problems over which the Tamil-speaking people were concerned, and Mr.Senanayake agreed that action on the following lines would be taken by him to ensure a stable Government:

1. Action will be taken early under the Tamil Language Provisions Act to make provision for the Tamil language to be the language of administration and of record in the Northern and Eastern Provinces. Mr. Senanayake also explained that it was the policy of his party that a Tamil-speaking person should be entitled to transact business in Tamil throughout the Island.

2. Mr.Senanayake stated that it was the policy of his Party to amend the Language of the Courts Act to provide for legal proceedings in the Northern and Eastern Provinces to be conducted and recorded in Tamil.

3. Action will be taken to establish District Councils in Ceylon vested with powers over subjects to be mutually agreed upon between the two leaders. It was agreed however that the Government should have power under the law to give directions to such Councils in the national interest.

4. The Land Development Ordinance will be amended to provide that citizens of Ceylon be entitled to the allotment of land under the Ordinance. Mr.Senanayake further agreed that in the granting of land under Colonisation Schemes the following priorities be observed in the Northern and Eastern Provinces:

   a) Land in the Northern and Eastern Provinces should in the first instance be granted to landless persons in the District;
   b) Secondly to Tamil-speaking persons resident in the Northern and Eastern Provinces , AND
   c) Thirdly to other citizens resident in the rest of the Island.

----------

1. "... The minorities looked with mistrust one at the other. It was wrong to think that the differences were not fundamental. There were men who thought that the differences were created by a few ambitious persons and when those persons died the differences would disappear. A hundred years ago there were no such differences. They did not appear because the Englishman sat on the heads of the Tamil, the Low-Country Sinhalese and the Kandyan Sinhalese.

   "The moment they began to speak of taking the Government in their hands, then the differences that were lying dormant smouldered forth. If they considered past history they would see that the three communities, the Tamils, the Low-Country Sinhalese and the Kandyan Sinhalese had lived for over a thoudand years in Ceylon and had not shown any tendency to merge. They preserved their language, their customs, their religion. He would be a very rash man who would pin his faith on the gradual disappearance of those differences.

   "In Ceylon each Province should have complete autonomy. There should be one or two assemblies to deal with the special revenue of the Island. A thousand and one objections could be raised against the system but when the objections were dissipated, he was convinced that some form of federal government would be the only solution." Ceylon Morning Leader, July 17, 1926.

2. Ceylon Morning Leader, May 19 to June 30, 1926.

3. Ceylon Independent, Nov.17, 1927; University of Ceylon History of Ceylon, Vol.III, Peradeniya 1973, p. 402.

4. L.A.Wickremaratne, 'Kandyans and Nationalism in Sri Lanka : Some Reflections', Ceylon Journal of Historical and Social Studies,V, Nos.1&2, Jan.-Dec. 1975,p. / 61.

5. J.T.Rutnam, 'Internal Federation', Ceylon Morning Leader, July 1, 1926.

6. Ceylon Daily News, August 13, 1957; Ceylon Faces Crisis, Federal Party publication, Sept. 1957, pp.33-36.

7. First Step, United National Party publication, Times of Ceylon Press, n.d.

8. C.Suntharalingam, Eylom : Beginnings of Freedom Struggle, Colombo 1967, p.49.

EVELYN RUTNAM LIBRARY JAFFNA
330

This article write by

[illegible]